# எழுத்து அறிமுகம்
# பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 3
# ‘நில்! கவனி! செல்!’

**கண்ணோட்டம்:**

பிள்ளைகள் எழுதுதலுக்கான ஆயத்தப் பயிற்சியில் ஈடுபடுவார்கள். அவர்கள் பலவிதக் கருவிகளைக்கொண்டு எழுதிப் பழகுவார்கள் (மணல், வண்ண மை, குச்சி, எழுதுகோல்). பிள்ளைகள் ‘ங’ என்னும் எழுத்தின் வரிவடிவத்தை எழுதக் கற்றுக் கொள்வார்கள்.

**கற்றல் குறிக்கோள் 2: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்**

1. **சிந்தனைகளைப் பிரதிபலிக்க அடையாளமிடுதல், குறியீடுகளை வரைதல், எழுத்துக்களை எழுதுதல்**

- ✓ கிறுக்கல்கள் செய்யவும் எழுத்துப் போன்ற வடிவங்களை உருவாக்கவும் தடித்த பென்சில்/ வண்ண எழுதுகோலைப் பயன்படுத்துதல்
- ✓ மணலில் வரைதல், விரலில் தடவப்பட்ட வண்ணங்கள் முதலியவை மூலம் எழுத்துப் போன்ற வடிவங்களை உருவாக்குதல்
- ✓ ஓர் எழுத்தின் கோடுகளை முறையாக எழுத முயலுதல்

**படிநிலைகள்**

1. ஆள்காட்டி விரலால் ‘ங’ என்னும் எழுத்தின் வடிவத்தை அல்லது அறிமுகப்படுத்த விரும்பும் எழுத்தின் வடிவத்தை வண்ண மணலில் எழுதிக் காட்டுங்கள்.



2. பிள்ளைகளை அதேபோல் எழுதிப் பழகச் சொல்லுங்கள்.





**பிள்ளைகள் ‘ங’ என்ற எழுத்தை வண்ண மணலில் எழுதுதல்**

3. கொடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைத் தாள்களைப் பிள்ளைகளின் எண்ணிக்கைகேற்ப பிரதியெடுத்துக்கொள்ளுங்கள்.

4. **நடவடிக்கை 1**: ஆள்காட்டி விரலை வண்ண மையில் தொட்டு ‘ங, ங்’ என்னும் எழுத்துகளின் மேல் வரிவடிவம் கெடாமல் அம்புக்குறிக்கேற்பப் பிள்ளைகளை எழுதச் சொல்லுங்கள். அப்போது எழுத்தை உச்சரிக்கச் சொல்லுங்கள்.

5. **நடவடிக்கை 2**: பிள்ளைகளிடம் புள்ளிகளை இணைக்கச் சொல்லுங்கள். பிறகு, ‘ங,ங்’ என்னும் எழுத்துகளை எழுதச் சொல்லுங்கள். எழுதும்போது அந்த எழுத்தை உச்சரிக்கச் சொல்லுங்கள்.

**********************************

**நடவடிக்கை 1**

பெயர் : ______________________________ தேதி : _______________

# வண்ணம் பூசுவேன்; சொல்வேன்





## நடவடிக்கை 2

பெயர் : ______________________ தேதி : ____________

# புள்ளிகளை இணைப்பேன்; சொல்வேன்



# எழுதுவேன்